“விஹாய ததஹம் வ்ரீதாம் யாக வேதாந்த்ர அமிர்தம் வக்ஸே விபூத ஜீவாதம் வஸுதேவ க்ருதோதயம்” யாகதோட மஹாபாரத பூஜை இருக்கே, மஹாபாரதம் வேதத்தோட ஐந்தாவது வேதம் சொல்றா. யாகம் என்பது வேதம் என்கிற கடல்ல கிடைத்த ஒரு அமிர்தம். மஹாபாரதத்தில் பகவத் கீதை என்பது ஒரு அமிர்தம், க்ருஷ்ணன் என்பவர் ஒரு அமிர்தம். மஹாபாரதத்தில் பகவான் க்ருஷ்ணருடைய பங்கை பற்றி தான் சொல்றா. வஸுதேவரோட குமாரரோட உதயம். அதாவது பகவான் ஶ்ரீ க்ருஷ்ணரோட உதயம். அது யாருக்கு அமிர்தம் தேவர்களுக்கு அமிர்தம் சொல்றா, எது என்றால் ஶ்ரீ க்ருஷ்ணரோட லீலைகள் தேவர்களுக்கு அமிர்தம். பகவத் கீதையோட ஶ்ரீ க்ருஷ்ணரோட உதயம் தேவர்களுக்கும், வித்வான்களுக்கும் உணவாக மாறுகிறது. கருணாம்ருதம் க்ருஷ்ணரோட லீலைகள். க்ருஷ்ணனுடைய பிறப்பு அமிர்தம். வாழ்கை என்பது இலை போல லேசாக இருக்க வேண்டும். முக்தியை அடைய க்ருஷ்ணரோட லீலைகளை பருகனும், க்ருஷ்ணரோட பிறப்பை உணரனும், கீதையை பருகனும், க்ருஷ்ணரோட அருமையான கொள்கைகளை பரப்பனும் அது தான் நம்முடைய கொள்கையா இருக்கனும்.